# SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD

# ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය

# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

## MINISTRY OF INDUSTRY & ENTREPRENEURSHIP DEVELOPMENT

# இந்தோனேசியாவிற்கான வெளிநாட்டு பிரதிநிதிக் குழு விஜயம் - கொடுவா, களவா மற்றும் பால்மீன் பண்ணைகள் தொடர்பான ஆய்வு, 2026 நவம்பர் 01 முதல் 10 வரை

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB) மற்றும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், இந்தோனேசியாவில் உள்ள இலங்கை தூதரகத்துடன் கூட்டிணைந்து, 2026 நவம்பர் 1 தொடக்கம் 10 ஆம் திகதி வரை கொடுவா, களவா மற்றும் பால்மீன் பண்ணைகள் தொடர்பான ஆய்வுக்கு இந்தோனேசியாவிற்கான வெளிநாட்டு பிரதிநிதிக் குழு விஜயம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த விஜயத்தின் பிரதான நோக்கம், இந்தோனேசியாவில் தற்போது இயங்கி வரும் மீன் குஞ்சு பொரிப்பகங்கள் மற்றும் மீன் வளர்ப்பு வசதிகளைப் பார்வையிடுவதுடன், அத்துறைசார் நிபுணர்களைச் சந்திப்பதாகும். மேலும், நேரடி வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல், தொழில்நுட்பப் பரிமாற்றத்தை மேம்படுத்துதல் மற்றும் புதிய கூட்டு முயற்சிகளை உருவாக்குதல் ஆகியனவும் இவ்விஜயத்தின் நோக்கங்களாக முன்மொழியப்பட்டுள்ளன.

**யாருக்காக**

இந்தத் துறையில் முதலீடு செய்ய ஆர்வமுள்ள மீன் வளர்ப்பாளர்கள் மற்றும் உள்ளூர் ஏற்றுமதியாளர்களிடமிருந்தும், அத்துடன் வெளிநாட்டு முதலீட்டு முகவர் நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவதற்கான சாத்தியமான கூட்டாளர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பங்கேற்பு செலவு**

தெரிவு செய்யப்படும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் நிறுவனங்களுக்கு (SME), நிதி ஒதுக்கீடு கிடைப்பதற்கு உட்பட்டு, விமானப் பயணக் கட்டணத்தில் 25% நிதியுதவியை EDB வழங்கும். மேலும், நிபுணர் சேவைகள், மொழிபெயர்ப்பாளர் சேவைகள், நிகழ்விடக் கட்டணங்கள் மற்றும் பங்கேற்பாளர்களின் உள்நாட்டு போக்குவரத்துச் செலவுகள் ஆகியவற்றையும் EDB ஏற்றுக்கொள்ளும். மீதமுள்ள விமானப் பயணக் கட்டணம், தங்குமிடச் செலவுகள் மற்றும் ஏனைய தொடர்புடைய அனைத்து செலவுகளையும் பங்கேற்பாளர்களே ஏற்க வேண்டும்.

**விண்ணப்பம் மற்றும் தேர்வு**

விண்ணப்பங்களை www.srilankabusiness.com ("Announcements" பிரிவின் கீழ்) EDB இணையதளத்தில் கிடைக்கப்பெறும் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் மேற்கொள்ளல் வேண்டும். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இந்தோனேசியாவுக்கு வெளிநாட்டு பிரதிநிதிக் குழு விஜயம்" என்று குறிப்பிட்டு 2026 செப்டெம்பர் 10ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் EDB, ஏற்றுமதி விவசாய – பணிப்பாளருக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். நிகழ்ச்சிக்காக பொருத்தமான அபேட்சகர்களை தேர்வு செய்வதற்கு குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் EDB மூலம் நிமிக்கப்பட்ட குழு ஒன்றினால் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

மேலதிக விபரங்களுக்கு 011-2300732, 011-2300705-11- நீடிப்பு: 388, மின்னஞ்சல்: yamuna@edb.gov.lk இன் செல்வி யமுனா சுமனரத்ன அவர்களை தொடர்புகொள்ளவும்.

**தலைவர் / தலைமை நிறைவேற்று அதிகாரி**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை,**
**இல. 42, EDB/NDB கோபுரம், நவம் மாவத்தை, கொழும்பு 02**
**இணையதளம்: www.srilankabusiness.com**